செ.வெ.எண் : 46 நாள் : 17.06.2021

**கோயம்புத்தூர் மாவட்டம்**

**மேட்டுப்பாளையம் காய்கறி மார்க்கெட் மற்றும் உருளைகிழங்கு மண்டி கடைகள் திறப்பது குறித்து வியாபாரிகளுடனான ஆலோசனை கூட்டம் மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு.கா.ராமச்சந்திரன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் நகராட்சி அலுவலக கூட்டரங்கில் இன்று(17.06.2021) பெள்ளாதி அருகில் உள்ள திறந்தவெளி மைதானத்தில் செயல்பட்டு வந்த காய்கறி மார்க்கெட் மற்றும் உருளை கிழங்கு மண்டி ஏற்கனவே செயல்பட்டு வந்த காந்தி காய்கறி மார்க்கெட்டில் உள்ள கடைகள் கட்டுப்பாட்டுகளுடன் திறப்பது குறித்து வியாபாரிகளுடனான ஆலோசனை கூட்டம் மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு.கா.ராமச்சந்திரன் அவர்கள் தலைமையில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது. இந்நிகழ்வின்போது, மாவட்ட வருவாய் அலுவலர் திரு.இராமதுரைமுருகன், வருவாய் கோட்டாட்சியர் திரு.ரவிச்சந்திரன், துணை இயக்குநர் (தோட்டக்கலைத்துறை) திருமதி.புவனேஷ்வரி, மற்றும் காய்கறி உருளைக் கிழங்கு மண்டி வியாபாரிகள் கலந்து கொண்டனர்.

**பின்னர் மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில்,**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தல் மற்றும் உத்தரவின்படி மேற்கொள்ளப்பட்ட போர்கால நடவடிக்கைகளின் காரணமாக தற்போது கோயம்புத்தூர் மாவட்டத்தில் கொரோனா தொற்று பரவல் வெகுவாக குறைந்துள்ளது.

ஊரடங்கு காலத்தில் பொதுமக்களுக்கு தேவையான அத்தியாவசிய பொருட்களான காய்கறிகள் தங்குதடையின்றி கிடைப்பதற்கு பல்வேறு

நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. மேலும், விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் வாழ்வாதாரத்தை பாதிக்காத வகையில், மேட்டுப்பாளையம் நகராட்சி பகுதியில் செயல்பாட்டுவந்த காந்தி மைதானம் காய்கறி மார்க்கெட் கொரோனா வைரஸ் தொற்று பரவல் காரணமாக தற்காலிகமாக பெள்ளாதி அருகில் உள்ள திறந்தவெளி மைதானத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டு செயல்பட்டு வருகிறது.

தற்போது மழைக்காலம் தொடங்கியுள்ளதால் அனைத்துவிதமான வேளாண்பொருட்களை பாதுகாப்பது மற்றும் விற்பனை செய்வதில் சிரமம் ஏற்படுவதாக வியாபாரிகள் மற்றும் விவசாயிகளிடமிருந்து கோரிக்கைகள் வரபெற்றது.

அதனைத்தொடர்ந்து, வியாபாரிகள் மற்றும் விவசாயிகளின் கருத்துக்கள் கேட்கப்பட்டுள்ளது. அதன்படி,

- காந்தி காய்கறி மார்க்கெட்டில் உள்ள அனைத்து கடைகளிலும், Hand sanitizer வைக்க வேண்டும்,
- வியாபாரிகள், பணியாளர்கள் அனைவரும் கட்டாயம் முகக்கவசம் அணிந்து சமூக இடைவெளியினை பின்பற்ற வேண்டும்.
- 50சதவீதம் கடைகள் மட்டும் திறக்கவேண்டும். மேலும், 50சதவீத பணியாளர்கள் மட்டும் வேலைக்கு அனுமதிக்கவேண்டும்.
- வியாபாரிகள், பணியாளர்கள் அனைவரும் கட்டாயம் அடையாள அட்டை அணியவேண்டும்.
- வியாபாரிகள், பணியாளர்கள் மற்றும் லாரி ஓட்டுநர்கள் அனைவருக்கு தடுப்பூசி செலுத்த மாவட்ட நிர்வாகத்தால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
- அதன்படி, அனைவரும் கட்டாயம் தடுப்பூசி போட்டுக்கொள்ளவேண்டும், உள்ளிட்ட கட்டுப்பாடுகளுடன் காய்கறி மார்க்கெட்டில் கடைகள் திறக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று விரைவில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் **என மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு.கா.ராமச்சந்திரன் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.**

முன்னதாக பெள்ளாதி உருளைக்கிழங்கு மண்டி, ஜடையம்பாளையம் காய்கறி மார்க்கெட், மற்றும் காந்தி மைதான உருளைக்கிழங்கு மண்டி கடைகள் மற்றும் பாவனி ஆற்றினையும் மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கோயம்புத்தூர்.**